**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.115/2023**

2024-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 21-ம் நாள் வாதி சாட்சியாகிய வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.ஜெயக்குமார், எழுத்தர் நிலை III என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - | அன்புச்செல்வம் |
| வயது | - | 47 |
| கணவர்/தந்தை பெயர் | - | ஆறுமுகம் |
| கிராமம் | - | சின்னஏழாச்சேரி |
| வட்டம் | - | வெம்பாக்கம் |
| தொழில் | - | |

21.08.2024

வா.சா. 1

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் 1ம் வாதியாவேன். என் தரப்பில் தாக்கல் செய்யும் நிரூபண வாக்குமூலத்தை இவ்வழக்கில் ஒரு பாகமாக வாசித்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். பிரமாணவாக்குமூலத்தில் சொன்ன சங்கதிகள் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 10.05.1981 தேதியிட்ட கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வாசதஆ.1, 19.05.1983 தேதியிட்ட கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வாசதஆ.2, 22.05.2022 மற்றும் 15.12.2022 ஆகிய தேதிகளில் நான் கொடுத்த விண்ணப்பங்களின் கை நகல்கள் வாதசாஆ.3 வரிசை (2 தாள்கள்) 16.10.2023, 30.10.2023 தேதியிட்ட மனு ஒப்புகை ரசீதுகள் வாதசாஆ.4 வரிசை (2 எண்ணிக்கை) தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

**குறுக்கு விசாரணை**

(வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது)